## சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டம் - 2015

சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 நவம்பர் 08 ஆம் திகதிய 4804–எல்கே ஆம் இலக்க கடன் நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II பீ 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சும் தற்போதைய நிதி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அபிவிருத்தி நிதித் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. உலகளாவிய நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு குறுகிய கால நிதியளித்தலை உள்ளடக்கிய நிதியளிப்பிற்கான அணுகுமுறையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

#### (அ) நிதியளித்தலும் ஆபத்தினைப் பகிர்தலும்

(i) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளிற்கான உப செயற்திட்ட கடன் நிதியேற்பாட்டு நோக்கங்களிற்காக பங்குபற்றும் நிதி நிறுவனங்களிற்கான (பீஎவ்ஐஎஸ்) கடன் வரிசையை நிறுவுவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான உற்பத்தித்திறன் மிக்க முதலீடுகளை மேற்கொள்ளல்.

(ii) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளிற்கான உப செயற்திட்ட கடன் நிதியேற்பாட்டு நோக்கத்திற்காகவும், ஆபத்து பகிர்தல் வசதி ஒன்றினால் மேவுகை செய்யப்பட வேண்டிய அவற்றின் சில உப செயற்திட்டக் கடன்கள் நோக்கமிடப்பட்டவை மற்றும் பெறுநரால் முழுமையாக நிதியளிக்கப்பட்டவை என்பவற்றுக்காக பங்குபற்றும் நிதி நிறுவனங்களிற்கான கடன் வரிசையை நிறுவுவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான நிதி விதிகளுக்கான அணுகுமுறையை விரிவுபடுத்தல்.

#### (ஆ) சிறிய மற்றும் நடுத்தர முயற்சி வங்கியியலிற்கான கொள்கைகளையும் இயலளவையும் முன்னேற்றுதல்

(i) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் மற்றும் அவ்வாறான முயற்சிகளுக்கு நிதியளித்தல் ஏற்பாடு தொடர்பாகவும் அந்நிதியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்குமென பங்குபற்றும் நிதி நிறுவனங்களது இயலளவைக் கட்டியெழுப்புதல்.

(ii) நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவம், கொள்வனவு, பணவளிப்பு என்பவற்றை உள்ளடக்கிய செயற்திட்ட முகாமைத்துவம், அமுல்படுத்தல், மேற்பார்வையிடல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கு ஆதரவு வழங்குதல்.

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,151.95 மில்லியனிற்கு சமமான எஸ்டீஆர் 37.8 மில்லியனானதுடன் (ஐ.அ.டொலர் 57.4 மில்லியன்) மொத்தத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மே 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டக் காலப்பகுதி 2015 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஐடிஏ | 57.4 | 8,151.95 | 2,400 | 1,837.25 | 44.73 | 6,351.88 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 10 | 8.13 | 0.30 | 42.52 |
| | **57.4** | **8,151.95** | **2,410** | **1,845.38** | **45.03** | **6,394.40** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 8,151.95 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 57.4 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 6,351.882 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 44.73 மில்லியன் மாத்திரமே செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடன் வரிசைக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,654.47 மில்லியன் தொகையில் 08 நிதி நிறுவனங்களுடாக 824 உப செயற்திட்டங்களிற்காக ரூபா 6,543.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடன் வரிசைக்காக செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் 98 சதவீதம் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் செவிடப்பட்டிருந்தது.